2021 பிப்ரவரி 26] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

11. மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர்களுக்கான இட ஒதுக்கீட்டிற்குள்ளாக தனி ஒதுக்கீடு வழங்கிய முதலமைச்சருக்கு பேரவைத் தலைவர் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு என்றால் நம் எல்லோர் கண்முன் நிற்பவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் கடைபிடிக்கப்பட்டுவரும் 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்கு ஆபத்து வருகிறது என்று தெரிந்தவுடன், தன்னுடைய சாதுர்யத்தால், சாணக்கியத்தனத்தால் அதனை இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்த்து அதனைப் பாதுகாத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். 69 விழுக்காடு இட ஒதுக்கீடு இன்றுவரை தமிழ்நாட்டில் கடைபிடிக்கப்பட்டு வருகிறதென்றால் அதற்கு முழுமுதற் காரணம் சமூக நீதிகாத்த வீராங்கனை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

அந்த வரிசையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட

வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர்களுக்கான இட ஒதுக்கீட்டிற்குள்ளாக தனி ஒதுக்கீடு செய்தல் சட்டமுன்வடிவை இன்று பேரவையில் அறிமுகம் செய்து அதனை நிறைவேற்றி வரலாற்றுச் சாதனையைப் படைத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்மூலம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்று நிரூபித்திருக்கிறார்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் மனதார இந்த அவையின் சார்பாகப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (27–2–2021) சனிக்கிழமை, காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–58 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

48. 28–5–2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/348(ஒ–1)/2020 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்து 2–9–2020 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 133–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

49. (i) 13–4–2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/232(h–5)/2020 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 1–10–2020 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 144–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (ii) 13–4–2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/232(h–6)/2020 ஆம் எண் அறிவிக்கைக்கு